2018 ஜூலை 3] [திரு. கே.ஏ. செங்கோட்டையன்]

ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. கன்னிமாரா நூலகத்தின் மூலமாக டிசம்பர் 2017-ல் கருத்துரு அனுப்பப்பட்டிருக்கிறது. அனைத்தும் அதிலே இணைக்கப்படுவதற்குண்டான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஆகவே, தமிழ் மொழியைப் பாதுகாப்பதற்கு அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலோடு நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற நம்முடைய அரசு அனைத்து நடவடிக்கைகளையும் முழுமையாக மேற்கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அனைத்தையும் மின்மயமாக்குவதற்குண்டான ஏற்பாடுகளை இந்த அரசு செய்திருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) கூடங்குளம் அணு மின் நிலையம், நிலம் கொடுத்தவர்களுக்கும், உள்ளூர் மக்களுக்கும் வேலைவாய்ப்பு அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.எஸ். இன்பதுரை, என்னவென்று சொல்லுங்கள்.*

***திரு. ஐ.எஸ். இன்பதுரை:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராதாபுரம் தொகுதியில்தான் கூடங்குளம் அணு மின் நிலையம் என்ற ஓர் அமைப்பு இருக்கிறது. அது 1,000 மெகாவாட் மின்சாரத்தை தமிழகத்திற்கு தந்துகொண்டிருக்கிறது. அதிலே உள்ளூரிலே இருக்கின்றவர்களுக்கு, அந்தத் திட்டத்திற்காக நிலத்தை இழந்தவர்களுக்கு, வேலைவாய்ப்பிலே முன்னுரிமை அளிக்க வேண்டுமென்ற ஓர் ஒப்பந்தம் 1999-ல் மாவட்ட நிருவாகத்தோடு அணு மின் கழகம் செய்து கொண்டிருப்பதாகக் கூறுகிறார்கள். ஆனால், அந்த நிலை இப்போது அங்கு இல்லை. எனவே, அங்கு ஒரு சந்தோஷமில்லாத நிலைமை* —restless feeling *நிலவுகிறது. எனவே, அம்மா அவர்களுடைய நினைவுகளை ஒவ்வோர் அணுவிலும் சுமந்து செயல்படுகின்ற எடப்பாடியாரின் தலைமையிலான தமிழக அரசு, இதில் தலையிட்டு, மத்திய அரசிடம் பேசி, அணு மின் கழகத்திடம் பேசி, உள்ளூர்வாசிகளுக்கும், நிலத்தை இழந்தவர்களுக்கும் வேலை பெற்றுத் தர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாகத் தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியது மத்திய அரசு சம்பந்தப்பட்டது. யாரெல்லாம் நிலம் கொடுத்திருக்கிறார்களோ அவர்களுடைய வாரிசுதாரர்களுக்கு வேலை கொடுக்க வேண்டுமென்று 1999 ஆம் ஆண்டு மாவட்ட ஆட்சியர் முன்னிலையில் ஓர் ஒப்பந்தம் போடப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையிலே இப்போது 676 பேர் அங்கே வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். நிலம் கொடுத்தவர்கள் 71 பேர் அங்கே பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இப்போது மூன்றாவது, நான்காவது யூனிட் கட்டடம் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். கிட்டத்தட்ட 3,958 பேர் இருக்கிறார்கள். அதிலே கிட்டத்தட்ட 952 பேர் ராதாபுரம் தாலுகாவிலேயே பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். நேற்றைய தினம்கூட மாவட்ட ஆட்சியர் அனைவரையும் வரவழைத்து பேசியிருக்கிறார். அவர்கள் ‘B’ category-க்கும், ‘C’ category-க்கும் இப்போது interview வைத்திருப்பதாக, test வைத்திருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதிலே தேர்ச்சி பெறுகின்றவர்களுக்கு நிச்சயமாக பணிகள் வழங்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். மத்திய அரசினுடைய கட்டுப்பாட்டிலே இருக்கின்றது அந்தத் துறை. நாங்களும் மத்திய அரசுடன் சேர்ந்து, எப்படியாவது நிலம் கொடுத்தவர்களுக்கு, உள்ளூர்க்காரர்களுக்கு வேலை வழங்க வேண்டுமென்றுதான் கேட்டுக்கொண்டிருக்கிறோம். முடிந்தவரை அவர்களுக்கு வேலைவாய்ப்பு பெற்றுத் தரப்படும் என்ற நம்பிக்கை இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று, நாங்களும் அவர்களோடு பேசி, அந்தப் பணியை நிறைவேற்றித் தருவதற்குண்டான முயற்சியைச் செய்வோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நிலம் கொடுத்தவர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்க வேண்டுமென்பதற்காக 16 ஆம் தேதியன்று எதிர்க்கட்சியினர் ஓர் ஆர்ப்பாட்டம் வைத்திருக்கிறார்கள். அவர்களிடம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இது மாநில அரசினுடைய கட்டுப்பாட்டில் இல்லை; மத்திய அரசினுடைய கட்டுப்பாட்டிலே இருக்கிறது. இருந்தாலும், ஒரு சுமுகமான நிலைமை ஏற்பட வேண்டுமென்பதற்காக மாவட்ட ஆட்சியரோடு பேசி, அவர்களையும் அழைத்து, அந்தப் போராட்டத்தை வாபஸ் வாங்குகின்ற வகையில், அவர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்று

2018 ஜூலை 3] [திரு. பி. தங்கமணி]

அறிவுரை வழங்கப்பட்டிருக்கிறது என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

5. சிறப்புக் கவன ஈர்ப்பு

திண்டுக்கல் மாவட்டத்தில் நிலவும் குடிநீர்ப் பிரச்சினை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சிறப்புக் கவன ஈர்ப்பு. திண்டுக்கல் மாவட்டத்தில் நிலவும் குடிநீர்ப் பிரச்சினை குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. பெரியசாமி, மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார், மாண்புமிகு உறுப்பினர் திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம் ஆகியோர் விதி 55-ன்கீழ் கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்துள்ளார்கள். இதனை சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. பெரியசாமி அவர்கள் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. பெரியசாமி அவர்கள்.*

முற்பகல் 11-45

*__திரு. இ. பெரியசாமி:__ *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் தொகுதியில் காவேரி குடிநீர் வழங்கப்படாதது குறித்தும், மாவட்டத்திலுள்ள அனைத்து பகுதிகளுக்கும் காவேரி குடிநீர் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்தும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்க்க விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) நீங்கள் சொல்லுங்கள்.*

*__மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:__ *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டத்தில் வேடசந்தூர், பாளையம், கன்னிவாடி, ஸ்ரீராமபுரம் ஆகிய பேரூராட்சிகள், ஒட்டன்சத்திரம் நகராட்சி மற்றும் 739 ஊரகக் குடியிருப்புகள் மற்றும் கரூர் மாவட்டத்தில் 25 ஊரகக் குடியிருப்புகள் ஆகியவற்றிற்கான வேடசந்தூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில்*